## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **தங்கப்பாண்டியன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**20.11.2025 OS.139/2019 வா.சா.1 தங்கப்பாண்டியன்**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:

1) எனது தந்தையின் தந்தை பெயர் என்ன என்றால் பிச்சை அம்பலம் ஆகும். பிச்சை அம்பலத்திற்கு எத்தனை மக்கள் என்றால் இரண்டு மகன்கள் ஆவார்கள் அவர்கள் முறையே பாலசுப்பிரமணியன், முருகேசன் ஆகியோர்கள் ஆவார்கள். எனது தகப்பனார் முருகேசனுக்கும் எனது தாயார் இந்திராவிற்கும் எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 1972 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனது தகப்பனார் முருகேசன் எனது தாயார் இந்திராவை திருமணம் செய்வதற்கு முன்பு பாண்டியம்மாள் என்பவரை திருமணம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும் மேற்படி பாண்டியம்மாள் தேளி கிராமத்தில் தற்போது வசித்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

2) எனது உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் நாங்கள் நான்கு பேர் இரண்டு ஆண் மக்கள் இரண்டு பெண் மக்கள் ஆவோம் அவர்கள் முறையே வெங்கடேஸ்வரி, ராதா ஆகியோர் பெண் மக்கள் ஆவார்கள், சுரேஷ்குமார் மற்றும் நான் ஆண் மக்கள் ஆவோம். எங்களில் மூத்தவர் யார் என்றால் எனது சகோதரி வெங்கடேஸ்வரி ஆவார். நான் எப்போது எங்கு பிறந்தேன் என்றால் நான் கடந்த 16.06.1978 ஆம் தேதி ஏனாதி கிராமத்தில் பிறந்தேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தாத்தா பிச்சை அம்பலம் எந்த ஆண்டு காலமானார் என்றால் 28.11.1972 ஆம் தேதி காலமானார்.

3) நான் பிறப்பதற்கு முன்பே எனது தாத்தா காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அதனால் அவரைப் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். எனது தாத்தா இறப்பதற்கு முன்பே எனது பாட்டி காலமாகிவிட்டார். எனது தாத்தா தாவா சொத்தில் உள்ள வீட்டில் தான் வசித்து வந்து காலமானார் என்றால் சரிதான். பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தில் அடிஅளவுகள் எதுவும்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2025.11.20 17:27:53 +0530

குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சாட்சி தற்போது பிராதுடன் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தில் அடிஅளவுகள் குறிப்பிடப்படவில்லை என சாட்சியம் அளிக்கிறார்.

4) பிராதுடன் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தை நான் ஆவணமாக குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். உத்தேச வரைபடத்தில் வாதியின் வீடு என குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள இடத்தில் கிழமேல் தென்வடல் அடிஅளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது சொத்து விவரத்தில் சொல்லியுள்ள முருகப்ப செட்டியாரிடம் எனது தகப்பனார் முருகேசன் வாய்மொழியாக கிரயம் பெற்றதாக சொல்லியுள்ள பகுதியை உத்தேச வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான்.

(**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது**).

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2025.11.20 17:27:59 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam